13

# Thirukk

திருக்கழுக்கு

3- AN 1933

13

*By*

T. CHENGALVARAYAN, B. A., L
Pachaiyappa's High School, Chidambaram

THAS

Q23:38.2125
N32
148145

# Thirukkaḷukunrum.

## திருக்கழுக்குன்றம்.

*By*

T. CHENGALVARAYAN. B. A., L. T.,
Pachaiyappa's High School, Chidambaram.

Printed at the
SRI KUNJITHASARANA PRESS, CHIDAMBARAM.

24-12-1932

உ

# முன்னுரை


ஒலிகடல் சூழுலகத்தில் உமையொருபாகன் எழுந்தருளிய சிவதலங்கள் பல்லாயிரமுள்ளனவாயினும் சிவானுபூதிச் செல்வராகிய சைவசமயாசாரியர்களால் பாடப்பெற்ற தலங்கள் சில நூற்றுக்கணக்கிலடங்குவதாயுள்ளன. அவற்றிலும் பிறவாயாக்கைப் பெரியோனாகிய சிவபெருமான் மஞ்சுசூழ்சோலை மலைமீதெழுந்தருளி ஆன்மாக்கட்கு அருள்புரியும் அரிய பதிகள் மிகச்சில. அவற்றுள், வேதங்களே மலை வடிவாகவர ஆண்டு மலைமேல் மருந்தாகவும், பவரோக மருத்துவனாகவும்உள்ள இறைவனெழுந்தருளி அருள் புரிவதும், மூர்த்தி தலம் தீர்த்தமாகிய முப்பெருமை வாய்ந்ததும், நூல்களிற்கூறும் அற்புதங்கள் இன்றும் கண்கூடாக நிகழ்வதும், சைவசமய குரவர்கள் நால்வர்களாலும் பாடப்பெற்றதும் ஆகிய திருக்கழுக்குன்றமெனும் அரிய தலமும் ஒன்று என்பதை அறியாதார் இலர்.

இத்தகைய எண்ணரிய சிறப்பு வாய்ந்த இத்திருக்கழுக்குன்றத்தில் கூடுகின்ற சென்னைமாகாண கருணீக இளைஞர் ஐந்தாவது மகாநாட்டிற்குத் தலைமைவகிக்கும்படி வந்த தீர்மானத்திற்கு இசைந்த யான் இங்கு குழுமிய இளைஞர்களும் ஏனையவர்களும் இத்தலத்தின் பெருமையை எளிதில் உணருமாறும், இத்தலப் பதிகங்களை நாடோறும் மறவாது சிந்தித்துத் துதிக்கப் பயன் படுமாறும் 'திருக்கழுக்குன்றம்' என்னும் மிகச் சுருக்கமான இந்நூலை வெளியிட்டுள்ளேன்.


இப்புத்தக விற்பனையால் அடையும் வருவாயை மாணவர்கள் கல்வி நிதிக்காகப் பயன் படுத்தப்படும். ஆகலான், அனைவரும் அறிவை வளர்க்கும் இப்பெரு நோக்கத்திற்கு உடன் படுவார்களென நம்புகிறேன்.

பச்சையப்பன் கலாசாலை,
சிதம்பரம்.
24—12—'32,

த. செங்கல்வராயன்.



திருக்கழுக்குன்றம்.



சங்குதீர்த்தம்.

# திருக்கழுக்குன்றப் பதிகங்கள்.

## திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் தேவாரம்.

பண் — குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்.

தோடுடையானொரு காதில்தூய குழைதாழ
ஏடுடையான் தலைகலனாக இரந்துண்ணும்
நாடுடையான் நள்ளிருள்ஏம நடமாடும்
காடுடையான் காதல்செய்கோயில் கழுக்குன்றே. 1

கேணவல்லான் கேழல்வெண்கொம்பு குறளாமை
பூணவல்லான் புரிசடைமேலோர் புனல்கொன்றை
பேணவல்லான் பெண்மகள்தன்னை யொருபாகம்
காணவல்லான் காதல்செய்கோயில் கழுக்குன்றே. 2

தேனகத்தார் வண்டதுவுண்ட திகழ்கொன்றை
தானகத்தார் தண்மதிசூடித் தலைமேலோர்
வானகத்தார் வையகத்தார்கள் தொழுதேத்தும்
கானகத்தான் காதல்செய்கோயில் கழுக்குன்றே. 3

துணையல்செய்தான் தூயவண்டியாழ்செய் சுடர்க்கொன்றை
பிணையல்செய்தான் பெண்ணின்நல்லாளை யொருபாகம்
இணையல்செய்யா இலங்கெயில்மூன்றும் எரியுண்ணக்
கணையல்செய்தான் காதல்செய்கோயில் கழுக்குன்றே. 4

பையுடைய பாம்பொடுநீறு பயில்கின்ற
மெய்யுடையான் வெண்பிறைசூடி விரிகொன்றை
மையுடைய மாமிடற்றண்ணல் மறிசேர்ந்த
கையுடையான் காதல்செய்கோயில் கழுக்குன்றே. 5

வெள்ளமெல்லாம் விரிசடைமேலோர் விரிகொன்றை
கொள்ளவல்லான் குரைகழலேத்துஞ் சிறுத்தொண்டர்
உள்ளமெல்லாம் உள்கிநின்றாங்கே உடனாடும்
கள்ளம்வல்லான் காதல்செய்கோயில் கழுக்குன்றே. 6, 7

ஆதல்செய்தான் அரக்கர்தங்கோனை யருவரையின்
நோதல்செய்தான் நொடிவரையின்கண் விரலூன்றிப்
பேர்தல்செய்தான் பெண்மகள்தன்னோ டொருபாகம்
காதல்செய்தான் காதல்செய்கோயில் கழுக்குன்றே. 8

இடந்தபெம்மான் ஏனமதாயும் அனமாயும்
தொடர்ந்தபெம்மான் றூமதிசூடி வரையார்தம்
மடந்தைபெம்மான் வார்கழலோச்சிக் காலனைக்
கடந்தபெம்மான் காதல்செய்கோயில் கழுக்குன்றே. 9

தேயநின்றான் திரிபுரங்கங்கை சடைமேலே
பாயநின்றான் பலர்புகழ்ந்தேத்த வுலகெல்லாம்
சாயநின்றான் வன்சமண்குண்டர் சாக்கியர்
காயநின்றான் காதல்செய்கோயில் கழுக்குன்றே. 10

கண்ணுதலான் காதல்செய்கோயில் கழுக்குன்றை
நண்ணியசீர் ஞானசம்பந்தன் தமிழ்மாலை
பண்ணியல்பாற் பாடியபத்தும் இவைவல்லார்
புண்ணியராய் விண்ணவரோடும் புகுவாரே. 11

திருச்சிற்றம்பலம்.

---

## திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்

தி ரு த் தா ண் ட க ம்.

திருச்சிற்றம்பலம்.

மூவிலைவேற் கையானை மூர்த்தி தன்னை முதுபிணக்கா டுடையானை முதலானானை, ஆவினிலைந் துகந்தானை அமரர் கோனை ஆலால முண்டுகந்த ஐயன் தன்னைப், பூவினின்மேல் நான்முகனும் மாலும் போற்றப் புணர்வரிய பெருமானைப் புனிதன் தன்னைக், காவலனைக் கழுக்குன்றம் அமர்ந்தான் தன்னைக் கற்பகத்தைக் கண்ணாரக் கண்டேன் நானே. 1

பல்லாடு தலைசடைமே லுடையான் தன்னைப் பாய்ப்புலித் தோலுடையானைப் பகவன் தன்னைச், சொல்லோடு பொருளனைத்து மானான் தன்னைச் சுடருருவி வென்பறாக் கோலத்தானே, அல்லாத காலனைமுன் னடர்த்தான் தன்னை ஆலின்கீழ் இருந்தானை அமுதானானைக், கல்லாடை புனைந்தருளுங் காபாலியைக் கற்பகத்தைக் கண்ணாரக் கண்டேன் நானே. 2

திருச்சிற்றம்பலம். (3-4-5-6-7-8-9-10)

---

## சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம்.

பண் — நட்டபாடை

திருச்சிற்றம்பலம்.

கொன்று செய்த கொடுமை யாற்பல சொல்லவே
நின்ற பாவம் வினைகள் தாம்பல நீங்கவே
சென்று சென்று தொழுமின் தேவர் பிரானிடம்
கன்றி னோடு பிடிசூழ் தண்கழுக் குன்றமே. 1

இறங்கிச் சென்று தொழுமி னின்னிசை பாடவே
பிறங்கு கொன்றைச் சடைய னெங்கள் பிரானிடம்
நிறங்கள் செய்த மணிகள் நித்திலங் கொண்டிழி
கறங்கு வெள்ளை யருவித் தண்கழுக்குன்றமே. 2

நீள நின்று தொழுமின் நித்தலு நீதியால்
ஆளு நம்ம வினைக ளல்கி யழிந்திடத்
தோளு மெட்டு முடைய மாமணிச் சோதியான்
காள கண்ட னுறையுந் தண்கழுக் குன்றமே. 3

வெளிறு தீரத் தொழுமின் வெண்பொடி யாடியை
முளிறி லங்கு மழுவாளன் முந்தி யுறைவிடம்
பிளிறு தீரப் பெருங்கைப் பெய்ம்மத மூன்றுடைக்
களிறி னோடு பிடிசூழ் தண்கழுக் குன்றமே. 4

புலைகள் தீரத் தொழுமின் புன்சடைப் புண்ணியன்
இலைகொள் சூலப் படைய னெந்தைபி ரானிடம்
முலைக ளுண்டு தழுவிக் குட்டியொ டுமுசுக்
கலைகள் பாயும் புறவிற் றண்கழுக் குன்றமே. 5

மடமு டைய வடியார் தம்மனத் தேயுற
விடமு டைய மிடறன் விண்ணவர் மேலவன்
படமு டைய் அரவன் றான்பயி லும்மிடம்
கடமு டைய புறவிற் றண்கழுக் குன்றமே. 6

ஊன மில்லா அடியார் தம்மனத் தேயுற
ஞான மூர்த்தி நட்ட மாடி நவிலும்மிடம்
தேனும் வண்டும் மதுவுண் டின்னிசை பாடியே
கான மஞ்ஞை யுறையுந் தண்கழுக் குன்றமே. 7

அந்தமிலா அடியார் தம்மனத் தேயுற
வந்து நாளும் வணங்கி மாலொடு நான்முகன்
சிந்தை செய்த மலர்கள் நித்தலுஞ் சேரவே
சந்த நாறும் புறவிற் றண்கழுக் குன்றமே. 8

பிழைகள் தீரத் தொழுமின் பின்சடைப் பிஞ்ஞகன்
குழைகொள் காதன் குழகன் றானுறை யும்மிடம்
மழைகள் சாலச் சலித்து நீடுயர் வேயவை
குழைகொண் முத்தஞ் சொரியுந் தண்கழுக் குன்றமே. 9

பல்லில் வெள்ளைத் தலையன் றான்பயி லும்மிடம்
கல்லில் வெள்ளை யருவித் தண்கழுக் குன்றினை
மல்லின் மல்கு திரடோ ளூரன் வனப்பினாற்
சொல்லல் சொல்லித் தொழுவா ரைத்தொழு மின்களே. 10

திருச்சிற்றம்பலம்.

---

## மாணிக்க வாசக சுவாமிகள் திருவாசகம்

### குரு தரிசனம்.

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

திருச்சிற்றம்பலம்

பிணங்கி லாதபெ ருந்து றைப்பெரு மான்உன் நாமங்கள் பேசுவார்க், கிணக்கி லாததோர் இன்ப மேவருந் துன்ப மேதுடைத் தெம்பிரான், உணக்கி லாததோர் வித்து மேல்விளை யாமல் என்வினை ஒத்தபின், கணக்கி லாத்திருக் கோலம் நீவந்து காட்டி னாய்கழுக் குன்றிலே. 1

பிட்டு நேர்பட மண்சு மந்த பெருந்து றைப் பெரும் பித்தனே, சட்ட நேர்பட வந்தி லாத சழக்க னேன் உனைச் சார்ந்திலேன், சிட்ட னேசிவ லோக னேசிறு நாயினுங் கடையாயவெங், கட்ட னேனையும் ஆட்கொள் வான்வந்து காட்டி னாய்கழுக் குன்றிலே.

மலங்கி னேன்கண்ணின் நீரை மாற்றி மலங்கெ டுத்த பெருந்துறை, விலங்கி னேன்வினைக் கேடனேன் இனி மேல் விளைவ தறிந்திலேன், இலங்கு கின்றநின் சேவடிகள் இரண்டும் வைப்பிட மின்றியே, கலங்கி னேன்கலங் காமலேவந்து காட்டினாய் கழுக்குன்றிலே

பூணொ ணாதொ ரன்பு பூண்டு பொருந்தி நாள் தொறும் போற்றவும், நாணொ ணாதொர் நாணம் எய்தி நடுக்கட லுள் அழுந்தி நான், பேணொ ணாதபெ ருந்துறைப்பெருந் தோணிபற்றி யுகைத்தலுங், காணொ ணாத்திருக் கோலம் நீவந்து காட்டினாய்க் கழுக்
குன்றிலே. 4

கோல மேனிவ ராகமேகுண மாம்பெ ருந்துறைக் கொண்டலே, சீல மேதும் அறிந்தி லாதஎன் சிந்தை வைத்த சிகாமணி, ஞால மேகரி யாக நானுனை நச்சி நச்சிட வந்திடுங், கால மேஉனை ஓதநீ வந்து காட்டி
னாய்கழுக் குன்றிலே. 5

பேதம் இல்ல தொர் கற்பளித்த பெருந்துறைப் பெருவெள்ளமே, ஏத மேபல பேசநீஎனை எதி லார் முனம் என்செய்தாய், சாதல் சாதல்பொல் லாமை யற்ற தனிச்ச ரண்சர ணாமெனக், காத லால்உனை
ஓதநீவந்து காட்டி னாய்கழுக் குன்றிலே. 6

இயக்கி மார்று பத்து நால்வரை எண்குணம் செய்த ஈசனே, மயக்க மாயதோர் மும்ம லப்பழ வல்வினைக்குள் அழுந்தவுந், துயக்க றுத்தெனை ஆண்டு கொண்டுநின் றூய்மலர்க்கழல் தந்தெனைக், கயக்க வைத்தடி யார்மு னேவந்து காட்டினாய் கழுக் குன்றிலே. 7

திருச்சிற்றம்பலம்.

---

## திருப்புகழ்.

அநத்தினைக்கொண் டிப்புவிமேல்சில
தினத்தகமற்றோன் றற்றறியாதபின்
அவத்துள்ளைக்குஞ் சித்தசனோடு கணையாலே-
அசுத்தமக்கண் கொட்புறுபாவையர்
நகைத்துரைக்குர் பொய்க்கடல்மூழ்கி
அலக்கணிற்சென் றுத்தடுமாறியே சிலநாள்போய்;
இகத்தைமெய்க்கொண் டிப்புவிபாலர்போன்
மயக்கினுற்றம் பற்றைவிடாதுட
லிளைப்பிரைப்பும் பித்தமுமாய்நரை முதிர்வாயே-
எமக்கயிற்றின் சிக்கிலாமுனுன்
மலர்பதத்தின் பத்திவிடாமன
திருக்குநற்றொண்டர்க்கிணையாகவுனருள்தாராய்;
புகழ்ச்சிலைக்கந் தர்ப்பனுமேபொடி
படச்சிரித்தண் முப்புரம்நீறுசெய்
புகைக்கனற்கண பெற்றவர்காதலி யருள்பாலா-
புவிக்குள்யுத்தம் புத்திரர்சேயா
சனத்துமுற்றுஞ் செற்றிடவேபகை
புகட்டிவைக்குஞ்சக்ரபாணிதன் மருகோனே;

திகழ்க்கடப்பம் புஷ்பமதார்புய
மறைத்தருக்கொண் டற்புதமாகிய
தினைப்புனத்தின் புற்றுறைபாவை யணைசீலா-
செகத்திலுச்சம் பெற்றமராவதி
யதற்குமொப்பென் றுற்றழகேசெறி
திருக்கழுக்குன்றத்தினில்மேவிய பெருமாளே(1)

மலைக்கனத்தென மார்பினிலேயிரு
முலைக்கனத்தற வேயிடைநூலென
வளைத்துருப்பமை யார்குழல்கோதொளொடும் அலைமோத-
மயிற்குலத்தவ ராமெனநீள்கலை
நெகிழ்த்துவித்திரு வார்விழிவேல்கொடு
மயக்கிநத்தினர் மேல்மறுபாடுமவ் விழியேவி;
விலைக்கெனத்தன மாயிரமாயிர
முலைக்களப்பினு மாசைபோதாதென
வெறுப்பர்குத்திரகாரியர்வேசையர்மயல்மேலாய்-
வெடுக்கெடுத்தும காபிணிபேலிட
முடக்கிவெட்கும தாமதவீணனை
மினற்பொலிப்பத மோடுறவேயருள் புரிவாயே;
அலைக்கடுத்தசு ரார்பதிகோவென
விடப்பணச்சிர மாயிரசேடனும்
அதிர்த்திடக்கதிர் வேல்விடுசேவக மயில்வீரா-
அடைக்கலப்பொரு ளாமெனநாயெனை
அழைத்துமுத்திய தாமனுபூதியே
னருட்டிருப்புகழோ துகவேல்மயிலருள்வோனே;
சிலைக்கைமுப்புரம் நீறெழவேதிரு
வுளத்திலற்பமெ ணுநினைதேகிகர்
சிறக்கமுத்தமி ழாலொருபாவக மருள்பாலா-
திருக்கடப்பவர் சூடியவார்குழல்
குறத்திகற்புட னேவிளையாடியோர்
திருக்கழுக்குணில்வாழ்முருகாசுரர் பெருமாளே()

Q28:58:2112T
N32

எழுகுநிறைநாபி அரிபிரமர்சோதி
யிலகுமரன்மூவர் முதலானோர்
இறைவியெனுமாதி பரைமுலையினூறி
யெழுமமிர்தநாறு கனிவாயா;
புழுகொழுகுகாழி கவுணியரில்ஞான
புனிதனெனஏடு தமிழாலே—
புனலிலெதிரேற சமணர்கழுவேற
பொருதகவிவீர குருநாதா;
மழுவுழைகபால டமாகத்ரிசூல
மணிகரவிநோத ரருள்பாலா—
மலரயனைநீடு சிறைசெய்தவன்வேலை
வளமைபெறவேசெய் முருகோனே;
கழுகுதொழுவேத கிரிசிகரிவீறு
கதிருலவுவாசல் நிறைவானோர்-
கடலொலியதான மறைதமிழ்களோது
கதலிவனமேவு பெருமாளே. (3)

குடங்கள்நிரைத்தேறு தடங்கள்குறித்தார
வடங்கள்அசைத்தார செயநீலங்—
குதம்பையிடத்தேறு வடிந்தகுழைக்காது
குளிர்ந்த முகப்பார்வை வலையாலே;
உடம்புமறக்கூனி நடந்துமிகச்சாறி
யுலந்துமிகக்கோலு மகலாதே—
உறங்கிவிழிப்பாய பிறந்தபிறப்பேனு
முனக்கொளப்பொற்பாத மருள்வாயே;
விடங்கள்கதப்பேறு படங்கணடித்தாட
விதங்கொள்முதற்பாய லுறைமாயன்-
விலங்கைமுறித்தோடி யிடங்கள்வளைத்தேறு
விளங்குமுகிற்கான மருகோனே;
தடங்கொள்வரைச்சாரல் நளுங்குமயிற்பேடை
தழங்கசமியற்பாடி யளிசூழத்—
தயங்குவயற்சாரல் குரங்குகுதித்தாடு
தடங்கதலிக்கான பெருமாளே. (4)

# திருக்கழுக்குன்றம்.

திருக்கழுக்குன்றம் அல்லது கங்காசலம் என்பது சான்ரோர் மிக்க தொண்டைநன்னாட்டில் செங்கற்பட்டுக்குத் தென்கிழக்கில் 9-மைலிலும் மஹாபலிபுரத்திற்குமேற்கில் 10-மைலிலும் கடற்கரையிலிருந்து 10-மைலிலும் உள்ள ஓர் திருத்தலம். இக்குன்றின் உச்சியில் கோயில்கொண்டெழுந்தருளிய முதல்வனைக் கழுகுகள் பூசித்துப் பேறுபெற்ற காரணத்தால் இதற்கு கழுக்குன்றமென்ற பெயர் வழங்கலாயிற்று. இன்றும் இருகழுகுகள் பக்ஷிபாறையில் வந்தமர்ந்துசைவபண்டாரம் படைக்கின்ற அன்னத்தை உண்டு செல்வதைக் கண்கூடாகக் காணலாம். இக்கழுகுகள் காசியில் கங்காஸ்நானம் செய்து இராமேஸ்வரத்தில் இறைவனைத் தொழுது பக்ஷிதீர்த்தத்தில் உணவருந்தி இரவில் சிதம்பரம்சென்று உறங்குவதாகப் பெரியோர்கள் எண்ணுகின்றார்கள்.

திருக்கழுக்குன்றம் தேவஸ்தான தருமகர்த்தர்களில் ஒருவரான திரு. M. M. குமாரசுவாமிமுதலியாரவர்கள் சரித்திர ஆராய்ச்சி நுண்ணுணர்வோடு மேல்நாட்டவர்க்கும் நம் நாட்டில் உயர்தரக் கல்விபயில்வோருக்கும் நனிமிகப் பயன்படுமாறு ஆங்கிலத்தில்எழுதியுள்ளஅருமையான நூலிலும் அந்தகக் கவி வீரராகவமுதலியார் அவர்கள் இயற்றிய தலபுராணத்திலும், இப்பறவைகளின் வரலாறு முதலியவற்றை பரக்கக் காணலாம்.

சண்டன் பிரசண்டன் என்பவர் கிரேதாயுகத்திலும், சம்பாதி, சடாயு என்பவர் திரேதாயுகத்திலும் சம்புகுத்தன் மாகுத்தன் என்பவர் துவாபரயுகத்திலும் கழுகுவடிவத்துடன் பூசித்துச் சாபம் நீங்கப்பெற்றார்களென்பதும், பூடா விருத்தாவென்பவர் இத்தகையபயனைநாடி இந்தயுகத்தில் கழுகுவடிவத்

துடன் பூசித்து வருகிறார் என்பதும் புராணவரலாறு. இப் புராணவரலாறுகளனைத்தும் உண்மையென்றுகொள்ள ஏலாது என்பாரும் இக்கதைகளிற் பொதிந்துள்ள கருத்துக்களையும் குறிப்புக்களையும் போற்றுவரென்பது திண்ணம். மற்றும் பல உருத்திரர்கள் பூசித்துப் பேறு பெற்றமையான் இதற்கு உருத்திரகோடித் தலமென்றும் பெயருண்டு. இக்குன்றின் நான்குசிகரங்களையும் நான்குவேதமாகக்கொள்வதால் இதற்கு வேதகிரி அல்லது வேதாசலமென்றும் பெயருண்டு. இந்நான்கினுள் மிக உயர்ந்துள்ள சிகரத்தில் உள்ள கோவிலே ஸ்ரீவேதகிரீஸ்வரர்கோயில்.

இற்றையிலிருந்து பல்லவ அரசர்கள் காலம்வரையில் இத் தலத்தைப்பற்றி ஒருவாறு அறிதற்கியலுமென்பது சரித்திர ஆராய்ச்சியிற் சிறந்த அறிஞர்கள் கொள்கை. பல்லவ அரசர்களில்முதலாம் நரசிம்மவர்மன் கோவிலின்நடுவேயுள்ள கட்டிடத்தைப் புதிப்பித்ததாகச் சொல்லப்படுகின்றது. இவ்வாலயத் தமர்ந்துள்ள ஈசனை இந்திரன், பிரமன், முருகன், சூரியன், சந்திரன் ஆகியவர்கள் பூசித்ததாகவும், பன்னிரண்டு ஆண்டுகளுக்கோர்முறை இடியொன்றுகோவிலின்உச்சியில் மின்னற் கொடியாக விழுந்து உட்புகுந்து இலிங்கத்தை மும்முறைவலம் வந்து ஒருவித தீங்குமிழைக்காமல் பூமிக்குள் மறைவதாகவும் கூறுகின்றார்கள். வேதகிரீஸ்வரர் ஆலயத்தினருகில் 'ஒருகல்' மண்டபமெனப் பெயருள்ள ஓர்குகையுளது. மிகப் பெரிய தூண்கள் அமைந்த இரண்டு தாழ்வாரங்களையுடையதும் அழகான சிற்பவேலைப்பாடுடையதுமான இம்மண்டபம் முதலாம் பல்லவ நரசிம்மன் ஆதரவில் குடைந்தெடுக்கப்பட்டதாக அறியக்கிடக்கின்றது. இதனுள் ஓர் இலிங்கம் உளது. இவ்விடம் பிரமன், விஷ்ணு, உருத்திரன் ஆகிய மூவரும் பூசிப்பதற்கு ஏற்பட்டதென அறிஞர் கூறுகின்றனர்.

மலையடிவாரத்தில் மூவர் கோவிலென்று வழங்கப்படும் ஆலயமொன்றுளது. அப்பர், சுந்தரர், சம்பந்தர் ஆகிய மூவரும் குன்றை மிதித் தேறுதற்கு அஞ்சி அடிவாரத்திலேயே

நின்று தேவாரத்திருப்பதிகங்கள் பாடித் துதித்ததாகத் தெரிகின்றது. இக்கோயிலிலமர்ந்துள்ள சுவாமிபெயர் பக்தவத்சலேஸ்வரர்; அம்மன் பெயர் திரிபுரசுந்தரி. இக்கோயிலில் செதுக்கியுள்ள சில உருவங்கள் மஹாபலிபுரத்தில் அரசு செய்த சோழவரசர் சுரகுருவென்பவரைக் குறிப்பதென்றும் இக்கோவிலை அவரே கட்டுவித்தவரென்றும் தலபுராணங் கூறுகின்றது.

மாணிக்கவாசகர் சிலநாட்கள் தங்கியிருந்து பெருந்துறையிற்கண்ட குருதரிசனங்கண்டு ஆட்கொள்ளப்பட்டதும் இத்தலத்திலேயே என்பர் பெரியோர். "ஆட்கொள்வான் வந்துகாட்டினாய்க் கழுக்குன்றிலே" என்பதை உணர்க. இன்னும் அவ்வடிகள் திருப்பெருந்துறையில் பெற்ற திருவடிகளைச் சிரமேற்றாங்கிவந்து இத்தலத்தில் வைத்ததாகவும் தெரிகிறது. இதனை 'இலங்குகின்ற நின்சேவடிகள் இரண்டும் வைப்பிடமின்றியே கலங்கினேன் கலங்காமலே வந்து காட்டினாய்க்கழுக்குன்றிலே' என்னுந் திருவாக்குத் தெரிவிக்கின்றது. வாகீசப்பெருமான் திருப்புகலூரில் தனது எண்பத்தோராவது வயதின்கண்ணே இரண்டற இறைவனோடு கலந்த தருணத்தில் திருவாய் மலர்ந்த திருத்தாண்டகம் ஒன்றில் கழுக்குன்றத்துச்சியாய்கடவுளே!' என்றதிருவாக்கும்இத்தலப் பெருமையை எடுத்துரைப்பது எல்லார்க்கும் எளிதின் விளங்கும். மாதவச்சிவஞானமுனிவரும் இத்தலத்தைப்பற்றி 'பாவகாரிகள் எய்தொணுக்கழுகுசூழ்பறம்பும்' என்று எடுத்துரைத்ததும் எண்ணத்தக்கதாகும். இன்னும் திருக்கழுக்குன்றத்தந்தாதி, வேதகிரீஸ்வரர்பதிகம் முதலிய பிரபந்தங்கள் இத்தலப்பெருமையையும் இங்குக் கோவில்கொண்டெழுந்தருளிய இறைவன் பெருமையையும் அனைவருக்கும் புலப்படுத்துகின்றன. இதுநிற்க. சிறந்தமூலிகைகள் வளர்கின்ற இக்குன்றின் காற்றுமுதலிய பூதப்பொருள்களின் குணவிசேஷங்களை நாடி இன்றும் பிணியாளர்கள் இத்தலத்தில்வந்து தங்கி ஒருமண்டலம் குன்றை வலம்வந்து மாற்றருங் குட்டநோய் முதலியனவும் நீங்கப்பெறுவதைக் காணலாம்.

முதலெட்டுத் திருமுறைகளிலுமுள்ள திருக்கழுக்குன்றப் பதிகங்கள் தொடக்கத்தில் பதிக்கப்பட்டுள்ளன. மற்றும், அத்திருமுறைகளிலும் பதினொன்று பனிரண்டாம்திருமுறைகளிலும் காணப்படும் கீழ்க்கண்ட பிறகுறிப்புக்களும் இத்தலத்தின் சிறப்பையுணர்த்தும்-

திருவாசகம், கீர்த்தித்திருவகவலில் 'கழுக்குன்றதனில் வழுக்காதிருந்தும்' எனவும், போற்றித்திருவகவலில் 'திருக்கழுக்குன்றில் செல்வாபோற்றி' எனவும், திருப்பதிகக்கோவையில் "கழுக்குன்றம் அச்சிறுபாக்கம்மே" எனவும், திருஞானசம்பந்தர் திருவாய்மலர்ந்தருளிய க்ஷேத்திரக்கோவையில் "கண்ணார் கழுக்குன்றம்" எனவும், ஆளுடையநம்பி அருளிய இடையாற்றுத்தொகைபதிகத்தில் "கச்சையூர்காவம் கழுக்குன்றம் காரோணம்" எனவும், ஆண்டாண்டு குறிப்பிட்டிருப்பதுமன்றி பதினோராந்திருமுறையிலும் பற்றறத்துறந்த ஞானப்பட்டினத்தடிகளும்,

"மிறைத்தார் புரமெய்தவில்லி ... ... ... ... ... ...

..................நீள்கழுக்குன்றமென்றீவினைகள்குறைத்தார்"

எனவும், பன்னிரண்டாம் திருமுறையாகிய திருத்தொண்டர் புராணத்தில்

"திருக்கழுக்குன்றத்தமர்ந்த செங்கனகத்தனிக்குன்று"

"நீடுதிருக்கழுக்குன்றில் நிருத்தனார்"

"எண்டிசையோர் பரவுதிருக்கழுக்குன்று"

"தேனார்ந்த மலர்ச்சோலைத் திருக்கழுக்குன்று"

"செந்துருத்தி, அறைந்தளிகள் பயில்சாரற்றிருக்கழுக்குன்று"

எனவும் அருள்வாக்குகள்பனிரண்டுதிருமுறைகளிலும் அமைந்திருக்கின்றன.

இத்தலத்தில் பன்னிரண்டு தீர்த்தங்கள் உள்ளனவென்பாரும் பதினெட்டு தீர்த்தங்கள் உள்ளனவென்பாருமாக இருவேறு கொள்கைகளைக் கொண்டாருளர்; ஏற்பன கொள்க. இவைகளில் மிகச் சிறந்தது சங்குதீர்த்தமாம். இஃது ஸ்ரீபக்தவத்சலேஸ்வரர் ஆலயக்கிழக்கு வாயிற்புறத்திலிருந்து செல்லும்

பாதையினிறுதியிலுள்ளது. இந்திரனால் [illegible] இடியபிஷேகத்திற்குப்பின் ஓராண்டிற்குள் இதிற் சங்கமொன்று பிறக்கின்றது. சங்குபிறப்பதற்கு மூன்றுநாட்கள் முன்னரே (பன்னிருநதியம்மையர் வந்து கூடுவதால்) இத்தீர்த்தத்தில் ஓர்பேரொலி தோன்றிப் பின்பு நீர்பொங்கியெழ அதுகண்டு பக்தர்கள் அனைவரும் காத்திருந்து நீர்ப்பொங்குதலுடன் எழுகின்ற சங்கத்தை மங்கலவாத்திய முழக்கத்துடன் விருதுகளோடு எற்றுச்சென்று அருள்நிறை சிவனுக்கு அச்சங்கத்தால் திருவபிடேகம் சிறப்புடன் செய்கின்றார்கள். இன்னும் பிணியாளர்களுக்கு அருமருந்தாய் விளங்குவதும் இத்தீர்த்தமே.

மூவர்கோவிலின் அருகில் நந்திதீர்த்தமென்ற அழகிய தடமொன்றுளது. நந்திதேவர் சாபம் நீங்குமாறு இவ்விடத்தில் தவஞ்செய்தாரென்று புராணங் கூறுகின்றது. பிற தீர்த்தங்களைக் குறித்து ஈண்டு விரித்துரைக்குமாறில்லை.

சாசனங்கள்:— திருக்கழுக்குன்றத்தி லெழுந்தருளிய பெண்ணினல்லாளம்மை சமேத ஸ்ரீவேதகிரீஸ்வரப்பெருமானுக்கு நித்தியநைமித்திகபூஜைக்காக பண்டைக்காலத்தில் அரசாண்ட பல்லவ பாண்டிய சோழ விஜயநகர அரசர்களாலும் மற்றுமுள்ளோர்களாலும் தானமாகத்தந்த நிலங்கள் திருப்பணிக்குரிய பொருள்களைப்பற்றிய விரிவானவிடயங்களை மேற்படி ஆலயங்களிலுள்ள சிலாசாசனங்களால் நன்கறியலாம். இச்சாசனங்களைப்பற்றிய குறிப்புக்களை (1) சென்னையாகாண சிலாசாசனத்தொகை முதலாவதுபிரிவிலும் (2) சென்னை கிரிஸ்தவ கலாசாலை பருவவெளியீட்டு 8, 9-ம்பிரிவிலும் (3) தென்னிந்தியசாசனம் மூன்றாம்பகுதியிலும் விரிவாகக் காணலாம். இக்குறிப்பு திரு. M. M. குமாரசுவாமி முதலியார் எழுதிய 'திருக்கழுக்குன்றம்' என்னும் நூலிலும் காணலாம்.

சிதம்பரம் ஸ்ரீ ரஞ்சித சாரண பிரசில் பதிக்கப்பட்டது.

*Reference Books:—*

1. 'Tirukalukunrum' by M.M. K. Mudaliar.
2. 'Tirukalukunra Puranam' by A. V. Mudaliar.
3. The Manual of Administration of the Madras Presidency.